




## ஷேர் ஆட்டோ முதல் விமானம் வரை

# சென்னையில் போக்குவரத்து, 'ஜோர்'

- நமது நிருபர் -

தென்னிந்தியாவின் வாசலாக கருதப்படும் சென்னை, இந்தியாவின் நான்காவது பெரிய நகரம். இங்கு, 71 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். சென்னையின் பொருளாதார வளர்ச்சியில், போக்குவரத்து முக்கிய பங்காற்றுகிறது. இங்கு, அனைத்து வித போக்குவரத்தும் சிறப்பாகவே உள்ளன.



மீனம்பாக்கம் விமான நிலையம்



துறைமுகம்



எழும்பூர் ரயில் நிலையம்



கோயம்பேடு பேருந்து நிலையம்

### துறைமுகம்

இந்தியாவின் மிகப்பெரிய துறை முகங்களில், மும்பைக்கு அடுத்தபடியாக, இரண்டாம் இடத்தை வகிப்பது, சென்னை துறைமுகம். தென் மாநிலங்களின் நுழை வாயில் என்ற பெருமை, சென்னைக்கு கிடைக்க, இந்த துறைமுகம் தான் காரணம்.

சென்னையின் பொருளாதார வளர்ச்சிக்கு, இந்த துறைமுகம், ஒரு முக்கிய காரணி. கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதிலும், பணப்பயிர், கிரானைட் கற்கள், கார் மற்றும் இரும்புத் தாது போன்றவற்றை ஏற்றுமதி செய்வதிலும், இந்த துறைமுகம் முன்னிலை வகிக்கிறது.

### மாநகர போக்குவரத்து சேவை

தமிழக அரசு, 1972 ஜனவரியில், 1,029 பேருந்துகளுடன், பல்லவன் போக்குவரத்துக் கழகத்தை துவங்கியது. 1994ல், அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம் என்ற பெயரில் செயல்பட்டது. 1997க்குப் பின், மாநகர போக்குவரத்துக் கழகம் என்ற பெயரில் இயங்குகிறது.

இதில், 34 பணிமனைகள் வழியாக, 3,500க்கும் அதிகமான பேருந்துகள் மற்றும் 100 சிற்றுந்துகள், 50 கி.மீ., துாரம் வரை இயக்கப்படுகின்றன. அவற்றில், 66 இரவு பேருந்துகள், 93 மகளிர் மற்றும் சிறுவர் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவற்றில், தினமும், 35 லட்சம் பேர் பயணிக்கின்றனர்.

தமிழ்நாட்டின் அனைத்து நகரங்களுக்கும், கேரளா, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களின் முக்கிய இடங்களுக்கும், சென்னையில் இருந்து, அரசு மற்றும் தனியார் பேருந்துகளும், ஆம்னி பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

### ரயில் போக்குவரத்து

சென்னையில் சென்ட்ரல், எழும்பூர் மற்றும் தாம்பரம் ஆகிய இடங்களில், முக்கிய ரயில் நிலையங்கள் உள்ளன. சென்னைக்குள்ளும், புறநகர் மற்றும் வெளி மாநிலங்களுக்கும், இங்கிருந்து ரயில்கள் இயக்கப்படுகின்றன.

சென்னை புறநகர் ரயில் சேவை, சென்ட்ரல் – அரக்கோணம், சென்ட்ரல் – கும்மிடிப்பூண்டி, கடற்கரை – தாம்பரம், செங்கல்பட்டு ஆகிய நான்கு மார்க்கங்களில் நடக்கிறது. மேலும், சென்னை கடற்கரை – வேளச்சேரி மார்க்கத்தில் பறக்கும் ரயில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### மெட்ரோ ரயில்

சென்னை மெட்ரோ ரயில் சேவை, சென்னை விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து கோயம்பேடு, சென்ட்ரலுக்கும்; சென்னை விமான நிலையத்தில் இருந்து, சைதாப்பேட்டை வழியாக, ஏ.ஜி., டி.எம்.எஸ்.,சுக்கும் இயக்கப்படுகிறது.

இவற்றில், தினமும், 55 ஆயிரம் பேர் பயணிக்கின்றனர். மெட்ரோ ரயில் நிலையங்களில், ஷேர் ஆட்டோ, இலவச சைக்கிள், ஷேர் டாக்சி, வாடகை பைக் வசதிகள் உள்ளன.

அடுத்தகட்டமாக, விமான நிலையத்தில் இருந்து, வண்ணாரப்பேட்டை வழியாக, திருவொற்றியூர் விம்கோ நகர் வரை இயக்கப்பட உள்ளது. மாதவரம் – சிறுசேரி சிப்காட், மாதவரம் – சோழிங்கநல்லூர், கோயம்பேடு – கலங்கரை விளக்கம் என, மூன்று வழித்தடங்களில், ,107.55 கி.மீ.,க்கு சேவை அமைய உள்ளது.

### விமான சேவை

சென்னை மீனம்பாக்கம் – திரிசூலத்திற்கு இடையே, 1,400 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள சென்னை விமான நிலையம், மத்திய விமான போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ், இந்திய விமான நிலையங்கள் ஆணையம் – ஏ.ஏ.ஐ., கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

இது டில்லி, மும்பை, பெங்களூரு விமான நிலையங்களுக்கு அடுத்த நிலையில், இயக்கம் மற்றும் பயணியரை கையாள்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இங்கு, 3,658 மீட்டர் மற்றும் 2,925 மீட்டர் நீளங்களில், இரண்டு ஓடுதளங்கள் உள்ளன. தென் மாநில விமான நிலையங்களுக்கு, இது தலைமையிடமாக உள்ளது.

குறிப்பாக, தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா, கேரளா, புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து இயங்கும், 49 விமான நிலையங்கள், சென்னை விமான நிலைய கட்டுபாட்டு அறையான, ஏ.டி.சி., கண்காணிப்பில் செயல்படுகின்றன.

இங்கு தினமும், பன்னாட்டு முனையத்தில் இருந்து, 15 ஆயிரம் பயணியரையும்; உள்நாட்டு முனையத்தில் இருந்து, 25 ஆயிரம் பயணியரையும் ஏற்றிச் செல்கிறது.

### ஆட்டோ, ஷேர் ஆட்டோ

சென்னையில், எந்த இடத்திலும், ஆட்டோ சேவை கிடைக்கும். அதிக கட்டணம் வசூலிப்பு, அடாவடி பேச்சு என, ஆட்டோ ஓட்டுனர்கள் மீது குற்றம் சாட்டினாலும், எந்நேரத்திலும் இவர்களின் சேவை கிடைக்கும்.

பேருந்து கட்டணத்தை விட, ஷேர் ஆட்டோ கட்டணம் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. இதில் பயணம் செய்வோர் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

'ஓலா, உபெர்' போன்ற கால்டாக்சிகளின் சேவையை, இன்றைய தலைமுறை, அதிகம் பயன்படுத்துகிறது. இதில் கட்டணம் குறைவு என்பதால், இந்த சேவை வளர்ச்சி அடைந்து வருகிறது.

### இருசக்கர வாகனங்கள்

போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளில், 'பீக் ஹவர்' நேரங்களில், ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரும் உதவியாக இருப்பது, இருசக்கர வாகனங்களே. இருசக்கர வாகனங்கள் தொடர்பான வணிகமும், சென்னையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

> சென்னையில், பெரும்பாலான ஆட்டோ ஓட்டுனர்கள், நான்கு சவாரிகளில் ஈட்டும் பணத்தை, வெளியூர்க்காரர்களிடம் ஒரே சவாரியில் பிடுங்கி விட ஆசைப்படுகின்றனர். அதனால், பயணியரிடம், ஆட்டோ ஓட்டுனர்கள் மீதான நம்பிக்கை குறைந்துவிட்டது. ஆட்டோ ஓட்டுனர்களை, போலீசார், மரியாதை குறைவாக நடத்துகின்றனர். எங்களின் வாழ்வாதாரம் சென்னை என்பதால், அதன் வளர்ச்சியில் எங்களுக்கு பெருமை தான்
>
> **தன்ராஜ்,** ஆட்டோ ஓட்டுனர்

> தாம்பரம் – சோழிங்கநல்லூர் வழித்தடத்தில், ஓட்டுனராக உள்ளேன். இங்கு, வெளியூர்க்காரர்கள் தான் அதிகம் உள்ளனர். அவர்களில் பலர், தினமும் ஒரே பேருந்தில் செல்வதால், நட்புடன் பழகுகின்றனர். சாலையோரம் நிறுத்தப்படும் வாகனங்களால், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. போக்குவரத்து போலீசாரின் நடவடிக்கைக்கு, பொதுமக்கள் ஒத்துழைப்பு தந்தால், சாலை போக்குவரத்தில் இடையூறுகளை தவிர்க்கலாம்.
>
> **பிரகாஷ்,** ஓட்டுனர், மாநகர போக்குவரத்துக் கழகம்






சென்னை தினம் கொண்டாடப்படுவதையொட்டி, சென்னையின் சிறப்பை விளக்கும் வகையில், மக்களின் பார்வைக்காக, சிறப்பு பேருந்து உருவாக்கப்பட்டு உள்ளது. அதை, தமிழ் வளர்ச்சி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் பாண்டியராஜன், நேற்று துவக்கினார். இடம்: மெரினா, விவேகானந்தர் இல்லம்.





